பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 24 செவ்வாய்க்கிழமை 06.04.2021 கதிர் 20

புத்தர் சிலை உடைப்பு:

## தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜை உயிரிழப்பு

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் புத்தர் சிலை உடைப்பு சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜை உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டிய பகுதியில் சிலை உடைப்பு சம்பவமொன்றின்

2

## விசேட பொருளாதார மத்திய நிலையங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்க முடிவு



(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையங்களை விரைவில் திறந்து வைக்க அரசு தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் பொருளாதார மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அவற்றின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ நிதியத்தை நிறுவுவதற்கும், முறையான பொறிமுறையைப் பின்பற்றி அங்கு வியாபார அலகுகளை ஒதுக்கி வழங்குவதற்கும்

2

# தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள்: தெரிவுக்குழுவுக்குப் பிரேரணை

### சபையில் சமர்ப்பித்தார் தினேஷ்



**இலங்கையின் தேர்தல் சட்டம் மற்றும் தேர்தல் முறைமையில் ஏற்படுத்த வேண்டிய திருத்தங்களை ஆராய்ந்து, பரிந்துரைகளை முன்வைப்பதற்கான தெரிவுக்குழு அமைப்பதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.**

**வெளிவிவகார அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தன இந்தப் பிரேரணையை இன்று முன்வைத்துள்ளார்.**

2

## பேராயரின் கருத்தால் கவலையில் மைத்திரி



தன்னைப் பற்றி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட கருத்து தொடர்பில் கவலையடைவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

2

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது!

### பேராயரின் கருத்துக்கு பீரிஸ் பதில்




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எந்தவொரு நபரையும் பாதுகாக்கவேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் சட்டமா அதிபரே தீர்மானம் எடுப்பார்.

- இவ்வாறு கல்வி அமைச்சரும் சட்டத்துறை

2

கேம் விளையாடத் தொலைபேசி தரவில்லை:

## பாடசாலை மாணவன் தூக்கிட்டு தற்கொலை

கைத்தொலைபேசியில் தொடர்ச்சியாக ஒன்லைன் விளையாட்டில் ஈடுபட்டு வந்த பாடசாலை மாணவன் ஒருவன் தாயார் கைத்தொலைபேசியைப் பறித்தமையால் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச்சம்பவம், சுழிபுரம்-பிளவத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பண்ணாகம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் தரம் 09இல் கல்வி கற்கும் 14 வயதான மாணவனே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## போதைப்பொருள்களுடன் யாழில் இருவர் மாட்டினர்!



யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள்களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொம்மைவெளியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவர்

2

## திருகோணமலைச் சிறையில் 21 கைதிகளுக்குத் தொற்று




திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலை கைதிகள் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக திருகோணமலை பொது வைத்தியசாலை

2

## ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக அஸ்கிரிய பீடம் போர்க்கொடி!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அஸ்கிரிய பீடம் அடியோடு நிராகரித்துள்ளது.

ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக கட்சி பேதங்களை மறந்து அனைவரும் அணிதிரள வேண்டும் என்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2

வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.



- ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
- வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

077 652 9583

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மாணவன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாகக் கைத்தொலைபேசியில் விளையாட்டில் ஈடுபட்டு வந்தமையால் மாணவனின் தாயார் கைத்தொலைபேசியைப் பறித்து வைத்துள்ளார். அதனைப் பொறுக்க முடியாத மாணவன் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருகோணமலைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாகசிறைக்கைதிகள்ஐவருக்கு, கடந்த வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ்தொற்றுஉறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் மேற்படி அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில், கடந்த மூன்று தினங்களில் திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 21 பேர் உறுதி செய்யப்பட்டுள்ளனர் என திருகோணமலை பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கோதுமை ஆலை ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என அன்டிஜன் பரிசோதனையில் உறுதியாகியுள்ளதாக உப்புவெளி பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஐ.நா. தீர்மானத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முக்கியமான கட்டத்தில் இலங்கையர்கள் அனைவரும் ஒரு நாடாக ஐக்கியப்படாவிட்டால், எதிர்ச் சக்திகள் நன்மையடைந்துவிடும்.

இலங்கை இராணுத்தினர் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அப்பாவி தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்பதை முழு உலகமும் கண்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சார்பான தரப்பினர் முன்வைக்கும் அழுத்தங்களைப் பொருட்படுத்தாமல், இன, மத, கட்சி பேதம் கடந்து இலங்கையர்கள் ஒன்றுபட வேண்டும். - என்றார்.

## எவரையும் பாதுகாக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். எனவே, அவருக்கு எதிராக உடனடியாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர்களால எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நபரொருவர் தொடர்பில் சாட்சியங்களின் அடிப்படையில்தான் வழக்குத் தாக்கல் செய்யப்படும். வழக்குத் தொடுப்பதா? இல்லையா? என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களமே தீர்மானம் எடுக்கும். இதுதான் நெறிமுறை.

கடந்த ஆட்சியின்போது இந்தக் கோட்பாடு மீறப்பட்டது. அலரி மாளிகையில் இருந்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதனால்தான் குழப்பமான நிலைகூட உருவானது.

அரசியல் காரணங்களின் அடிப்படையில் அல்ல சாட்சியங்களின் அடிப்படையிலேயே சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. அதேபோல் எவரையும் பிரச்சினைகளுக்குள் சிக்கவிட வேண்டும் என்ற எண்ணமும் எமக்கு இல்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் உரிய வகையில் இடம்பெறுகின்றன. கடந்த சில நாள்களில்கூட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார்.

## போதைப்பொருள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கிலோ 750 கிராம் கஞ்சாப் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று பொம்மைவெளி 8ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவர் 5 கிராம் 750 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடனும் 28 ஆயிரம் ரூபா பணத்துடனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் நேற்று நண்பகல் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் யாழ். பொலிஸ் போதைத்தடுப்புப் பிரிவினரால் மேற்படி நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து குறித்த போதைப்பொருள்களும் மீட்கப்பட்டன.

## பேராயரின் கருத்தால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேனவைக் கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றவாளி எனக் கூறப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி தனது கடமைகளைச் செய்யத் தவறியவர். இவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஆடை அணிந்துகொண்டுதான் கூறுகின்றாரா?' என்றும் பேராயர் கேள்வி எழுப்பியிருந்தார்.

பேராயரின் இந்தக் கருத்து தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர், பேராயர் என்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் நான் மிகவும் கவலையடைகின்றேன் - என்றார்.

# இன்று இரவு முடிவு தெரியும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.06

யாழ்ப்பாணம் நகர வர்த்தகர்கள் மற்றும் நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குள் இரு நாள்களாக பெறப்பட்ட 861 பி.சி.ஆர். மாதிரி மூன்று இடங்களில்பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வர்த்தகர்களிடம் நேற்றையதினம் 487 மாதிரிகளும் நகர வர்த்தகர்களிடம் இருந்து இன்றைய தினம் 197 மாதிரிகளும் பெறப்பட்டன. இதேநேரம் இன்றையதினம்மேலும்சுய தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்த184 பேருமாகவே இன்று 381 மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு பெறப்பட்ட அனைத்து மாதிரிகளும் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் இவற்றின் பெறுபேறுகள் இன்று இரவு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேர்தல் சட்டத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணையின்படி, தெரிவுக்குழுவுக்கு 15 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

குறித்த குழு 6 மாதங்களில் சபாநாயகருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போதுள்ள தேர்தல் சட்டம், தேர்தல் முறைமையின் குறைபாடுகளை அடையாளம் கண்டு, திருத்தங்களைப் பரிந்துரைப்பதே தெரிவுக்குழுவின் பணியாகும்.

தேர்தல் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பான நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் துறைசார் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும் தெரிவுக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

## விசேட பொருளாதார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாயிகளின் உற்பத்திகளை நேரடியாகச் சந்தைப்படுத்துவதற்கும், போட்டித்தன்மை மூலம் மிகவும் வினைத்திறனான விலைப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமான வகையில் இந்தப் பொருளாதார மத்திய நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

## தடுத்து வைக்கப்பட் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபராக கைது செய்யப்பட்ட இவர், வாரியபொல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேக நபருக்கு நேற்றிரவு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

45 வயதுடைய இந்தியப் பிரஜை மாரடைப்பு காரணமாக வாரியபொல மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரின் உடல் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக வாரியபொல மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

மஞ்சள் கன்று விற்பனைக்கு
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

இஞ்சி கன்று விற்பனைக்கு
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வரும்... ஆனா... வராது!

'தொட்டால் பூ மலரும்' என்ற படத்தில் வரும் ஒரு நகைச்சுவை வசனம் பிரபலம். ஈழத் தமிழர்களின் அரசியலும் நகைச்சுவையான விடயமாக மாறி விட்டதால் அதன் ஒரு கட்டத்தை விளக்க இந்த நகைச்சுவை வசனமே பொருந்தி வருகின்றது.

இலங்கைத் தமிழர்கள் கோரும் அரசியல் அதிகாரப் பகிர்வில் இன்று சாத்தியமாக உள்ளது மாகாண சபை முறைமை தான். அதைக் கூட நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை நாமே சேர்ந்து கெடுத்துக் குட்டிச் சுவராக்கி வைத்திருக்கிறோம். அதை விளக்குவதுதான் இந்த நகைச்சுவைக் காட்சியின் வசனம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை நிர்வாக முறைமையை வடக்கு, கிழக்கு மக்கள் இழந்து மூன்று ஆண்டுகளாகின்றன. மீண்டும் அது கிட்டுமா, மாகாணத் தேர்தல் வருமா என்று கேட்டால் மேற்படி நகைச்சுவைக் காட்சியில் பழம்பெரும் நடிகர் என்னத்தே கன்னையா கூறுகின்றமை போல 'வரும்... ஆனா வராது...!' என்றுதான் பதிலளிக்க வேண்டியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ அரசின் சார்பில் அதன் கல்வி அமைச்சரும் சட்ட விடயங்களில் ஓரளவு விவரம் அறிந்தவருமான ஜி.எல்.பீரிஸ் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் – 'வரும்... ஆனா வராது' என்ற பாணியில்.

மாகாணத் தேர்தலுக்குத் தயாராகுங்கள் என்று தனது கட்சிக்காரருக்கு உசுப்பேற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்.

இது கடந்த மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணை வந்த சமயத்தில் நடந்தது.

இப்போது சுருதி தலைகீழாக மாறி விட்டது. பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியை முன்னிறுத்தி, அதன் மீது ஆட்சி அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய சாம்ராச்சியத்தின், இனவெறி முகம் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து, அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்யும் மாகாண சபை முறைமைக்கு எதிரான கருத்துகளும் திரும்பவும் மூர்க்கம் பெற்றுள்ளன. அவற்றுக்கு செவி சாய்ப்பது போல, அரசு சார்பில் கருத்து களைப் பிரதிபலித்திருக்கின்றார் கல்வி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்.

புதிய உத்தேச அரசமைப்புக்கான நகல் வடிவம் வரும் ஜூனில் – அதாவது அடுத்த இரண்டு மாதங்களில் வந்து விடும் எனக் கூறும் அவர், மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை ஒழுங்குபடுத்தி அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இன்னும் ஆறு மாதங்களாவது தேவை என்கின்றார்.

இதன் அர்த்தம் என்ன? மாகாண சபைத் தேர்தல்கள் 'வரும்... ஆனா வராது!' என்பது தானே..?

மாகாணத் தேர்தல் சட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படுவதற்கு முன்னர் புதிய அரசமைப்புக்கான உத்தேச நகல் நேரத்துடனேயே வந்து விடும் என்றால், அந்த உத்தேச நகலில் மாகாண சபை முறைமை இல்லாவிட்டால், இந்தத் தேர்தலும் நடக்காது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

மாகாணத் தேர்தலை நடத்தும் முறைமை பற்றி ஆராய இன்று ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் காலத்தை இழுத்தடிக்கும் வேலையே.

1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் மூலம் இந்தியா கொடுத்த அழுத்தத்தின் பேரிலேயே இலங்கையின் அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் மூலம் மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. அதனால் அதனை முற்றாக எதிர்க்கின்றமையோடு, புதிய அரசமைப்பில் மாகாண சபை முறைமையையே முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் –

புதிய அரசமைப்பு கொண்டு வந்து நிறைவேற்றப்படுவதற்து வதற்கு முன்னர் அவசரப்பட்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடாது என்றும் –

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் கப்பலின் சுக்கானை – இலாகனை – பிடித்திருக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகள் ஒற்றைக் காலில் நின்று வற்புறுத்தி வருகின்றன.

தான் தோற்றாலும், தன்னை அதிகாரத்துக்குக் கொண்டு வந்த கொள்கைக் கோட்பாடு தோற்கடிக்கப்படக் கூடாது என்று கூறுவதன் மூலம் பௌத்த, சிங்களப் பேரினவாதக் கோட்பாட்டுக்கு – கொள்கைப் போக்கு – 'சலாம்' வைத்து நிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த சக்திகளின் விருப்புக்கு மாறாக ஒரு துரும்பையும் அசைக்கப் போவதில்லை என்பது நிச்சயம். அதன் காரணத்தினால் அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்யும் மாகாண சபை முறைமை செயற்பட அவர் அனுமதிக்கப் போவதில்லை என்பதும் தெளிவு.

13 ஆவது திருத்தத்தையும் தாண்டி, தமிழர்களுக்கு அர்த்தமுள்ள வகையில் அதிகாரங்களைப் பகிர்வதில்தான் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும் தங்கியுள்ளது, என்று ஜெனிவாவில் வலியுறுத்திய இந்தியா, 13 ஆவது திருத்தமே 'அவுட்' என்ற நிலைப்பாட்டை கொழும்பு வெளிப்படையாக எடுக்கும்போது என்ன செய்ய போகின்றது?

இந்திரா காந்தி போன்ற வலிமையான தலைவர் தாம் என்பதை பிரதமர் மோடி நிரூபிப்பதற்கான களச்சூழமைவு இப்படித்தான் தோற்றம் பெறுகின்றது போலும்....!

# பீல்ட் மார்ஷல் பதவியில் உள்ளவர்களுக்கு சம்பளமோ ஓய்வூதியமோ வழங்குவதில்லை

## சமல் ராஜபக்ஷ கூறுகின்றார்



பீல்ட் மார்ஷல் பதிவி வகிப்பவர்களுக்கு இராணுவத்தால் சம்பளமோ, ஓய்வூதியமோ வழங்கப்படுவதில்லை. ஆனால் வாழ்நாள் வரையில் பீல்ட் மார்ஷல் பதவி நீடிக்கும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஆளுங் கட்சி உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பீல்ட் மார்ஷல் பதவியென்பது இராணுவத்தில் உள்ள உயர் பதவியாகும். இராணுவச் சம்பிரதாயங்களுக்கு அமைவாக பீல்ட் மார்ஷல் பதவியும், அதற்கு இணையாக கடற்படையில் உள்ளவர்களுக்கும் அப்பதவி வழங்கப்படுகின்றது. அப்பதவியைப் பெறுபவர்கள் வாழ்நாள் வரையில் அந்தப் பதவியில் இருப்பார்கள்.

அத்துடன் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அவரது பணியாட் தொகுதிக்காக 19 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர், அவருக்குப் படையினரின் உத்தியோகபூர்வ காரொன்றும் வழங்கப்பட்டுள்ளது, சரத் பொன்சேகாவுக்கு உத்தியோகபூர்வ இல்லம் எதுவும் வழங்கப்படவில்லை.

மேலும் அட்மிரல் கரண்ணாகொடவுக்குப் பணியாட் தொகுதிக்காக 09 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவருக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. பணியாட் தொகுதியினரின் பாவனைக்காக ஜீப் ரக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது.

விமானப் படையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற டபிள்யூ.டி.ஆர்.ஜே. குணதிலக்கவுக்கு பணியாட் தொகுதிக்காக 17 பேர் நியமிக்கப்பட்டுள்ளதோடு, உத்தியோகபூர்வ இல்லமோ, வாகனமோ வழங்கப்படவில்லை.

அத்துடன் பீல்ட் மார்ஷல் பதவி வகிப்போருக்கு சம்பளமோ அல்லது ஓய்வுதியங்களோ வழங்கப்படுவதில்லை. – என்றார்.

# பிரதமரின் வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோரி இலங்கை வங்கி ஊழியர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 'இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரால்' வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா கண்டி வீதியில் பிற்பகல் 12 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வங்கி ஊழியர்களுக்கான ஓய்வுதியத்திட்டம் தொடர்பான பிரச்சினை, வங்கி ஊழியர்களின் பயிற்சிக்காலததை இரண்டு வருடங்களாக மட்டுப்படுத்துதல் மற்றும் இலங்கை மர்ச்சன்ட் வங்கியின் நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்–

இந்த விடயங்களைத் தீர்ப்பதற்கு மிகவும் தெளிவான முறையில் பிரதமரால் தீர்வுகள் முன்வைக்கப்பட்ட நிலையிலும் அது செயற்படுத்தப்படவில்லை,

இவற்றை வலியுறுத்தி நாம் அந்தந்த வங்கிகளின் நிர்வாகத் தரப்புகளுடன் பலசுற்று கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தாலும், பிரதமரால் வழங்கப்பட்ட தீர்வுகளைச் செயற்படுத்துவதற்குப் பதிலாகப் பல்வேறு விதமான விளக்கங்கள் வழங்கப்பட்டு காலங் கடத்தப்பட்டு வருகின்றமையால், ஊழியர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது. எனவே குறித்த பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க வேண்டும். – என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், பிரதமர் உறுதியளித்து எட்டு மாதங்கள் ஆகியும் ஓய்வூதியம் எங்கே, இணக்கம் தெரிவிக்கப்பட்ட 96 இன் பின்னரான ஓய்வூதிய திருத்தங்களை உடனே செயற்படுத்துக, பயிற்சிக்காலத்தை இரண்டு வருடங்களுக்கு மட்டுப்படுத்துக, போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

# தேசிய உளவுச் சேவை பிரதானி சஹ்ரானை மலேஷியாவில் சந்தித்தாரா?

## நளின் பண்டாரவிடம் விசாரணை



தேசிய உளவுச் சேவை பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, மலேஷிய தூதரகத்தில் சேவையாற்றிய போது, அங்கு வைத்து பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமை சந்தித்துள்ளார் எனவும், அவருக்கு இந்தியா, இந்தோனேஷியா செல்ல உதவிகளை செய்துள்ளார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறிய விடயங்களுக்கு எதிராக சி.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

தேசிய உளவுச் சேவை பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவால் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் விசாரணைகளை சி.ஐ.டியின் உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் கீழான சிறப்பு தனிப்படை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவிடம், சி.ஐ.டியின் பிரத்தியேக குழு கடந்த திங்கட்கிழமை 3 மனி நேரம் அவரை விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளது.

திங்கள் முற்பகல், 9 மணி முதல் நன்பகல் 12.15 மணி வரையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஏற்கனவே இந்த விவகாரத்தின் முதல் கட்டமாக முறைப்பாட்டாளரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே சி.ஐ.டிக்கு சென்று முறைப்பாட்டுக்கு அமைவான தனது வாக்கு மூலத்தை வழங்கியிருந்தார். இந் நிலையிலேயே தற்போது நளின் பண்டாரவிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பேரறிவாளன் விடுதலை தமிழக அரசுக்கு நோட்டீஸ்



பேரறிவாளன் தொடர்பான விவகாரத்தில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கடிதத்தின் நகலை வழங்குமாறு கேட்டு அவரது தாயார் தொடர்ந்த வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க நோட்டீஸ் அனுப்ப உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேரறிவாளன் உட்பட ஏழு பேர் விடுதலை விவகாரத்தில் ஜனாதிபதிக்குத் தான் உட்சபட்ச அதிகாரம் உள்ளது என்பதால் அது தொடர்பான கோரிக்கை மற்றும் அமைச்சரவை தீர்மானம் ஆகியவற்றை நிராகரிப்பதாக கடந்த ஜனவரி 25 ஆம் திகதி தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'பேரறிவாளனுக்கு பரோல் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தபோது, இந்த விவகாரத்தில் பல்நோக்கு விசாரணை என்பது முடியும் வரை எந்தவித முடிவும் தன்னால் எடுக்க முடியாது என தமிழக ஆளுநர் தரப்பில் கடிதம் மூலம் தகவல் அனுப்பி விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்திருந்தது. பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் ஜனாதிபதிக்குத்தான் உச்சபட்ச அதிகாரம் உள்ளது, தனக்குக் கிடையாது என உச்ச நீதிமன்றத்தில் தமிழக ஆளுநர் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

இவை இரண்டும் முரண்பட்ட தகவல்களாக உள்ளன. அதனால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தாக்கல் செய்துள்ள கடிதத்தின் நகலை எங்களுக்கு வழங்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்' என குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி பாலி நாரிமன் தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், "இது குறித்து தமிழக அரசு பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. இந்த மேல்முறையீட்டு மனுவானது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பிரதான வழக்கோடு இணைத்து விசாரிக்கப்படும்" என உத்தரவிட்டனர்.

# சட்டீஸ்கரில் உளவுத்துறை தோல்வி

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



சட்டீஸ்கரில் நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கை மிக மோசமான முறையில் முன்னெடுக்கப்பட்டதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை நக்சல்களுடன் நடைபெற்ற மோதலின்போது 22 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள ராகுல் காந்தி, 'இது எவ்வித திட்டமிடலும் இல்லாமல் மிக மோசமாக செயல்படுத்தப்பட்ட திட்டம். இதில் உளவுத்துறை தோல்வியடையவில்லைஎன்கிறார்கள். அப்படியானால், நக்சல்களுக்கு நிகரான எண்ணிக்கையில் பாதுகாப்புப் படை வீரர்கள் கொல்லப்பட்டது எவ்வாறு?' என கேள்வி எழுப்பியுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டில் எந்தவொரு இராணுவ வீரரும் பாதுகாப்புக் கவசம் இல்லாமல் எதிரியை நேரடியாக எதிர்கொள்ள முடியாது. ஆதலால் பாதுகாப்புக் கவசம் ஒவ்வொரு இராணுவ வீரருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று தனது டுவிட்டர் பதிவில் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மோதலின்போது பாதுகாப்புப் படையினர் 22 பேர் மரணமடைந்துள்ளதாக பிஜாப்பூர் எஸ்.பி. கமலோச்சன் காஷ்யப் தெரிவித்திருந்தார்.

# கொரோனாப் பரவல் அதிகரிப்பு ஷீரடி சாய்பாபா கோவிலும் பூட்டு

மகராஷ்டிராவில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிவேகமாக அதிகரித்து வருகிறது. ஒருநாள் சராசரி தொற்று எண்ணிக்கை ஐம்பதாயிரத்திற்கும் அதிகமாக பதிவாகி வருவது மக்களிடையே அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து நோய்த் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இரவு மற்றும் வார இறுதி நாள்களில் ஊரடங்கும் பகல் நேரத்தில் 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அகமது நகர் மாவட்டத்தில் உள்ள உலகப் பிரசித்திபெற்ற ஷீரடி சாய்பாபா கோவிலில் நேற்று இரவு முதல் பக்தர்களின் வருகை தடைசெய்யப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை கோவில் மூடப்பட்டு இருக்கும் என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து ஸ்ரீ சாய்பாபா சான்ஸ்தான் அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரி ரவீந்திர தாக்கரே கூறுகையில், கோவிலில் தரிசனம் செய்ய பக்தர்களுக்கு அனுமதி இல்லை. கோவிலின் பக்தர்கள் தங்குமிடம் மற்றும் அன்னதானக் கூடமும் மூடப்பட்டு இருக்கும். இருப்பினும் கோவிலுக்குள் தினமும் வழக்கமான பூசைகள் நடைபெறும் என்று குறிப்பிட்டார்.

# தடுப்பூசி செலுத்திக்கொண்டால் பரிசு

குஜராத் மாநிலம் ராஜ்கோட் பகுதியில் உள்ள தங்க நகை வடிவமைப்பாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது பொது அமைப்பின் சார்பில், மக்களிடையே கொரோனாத் தடுப்பூசியை செலுத்திக் கொள்ள ஊக்கப்படுத்தும் நோக்கில் பரிசுகளை அறிவித்துள்ளனர்.

தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் பெண்களுக்கு தங்க மூக்குத்தியும் ஆண்களுக்குகேக்மற்றும்முட்டையை அடிக்க உதவும் ப்ளெண்டர் கருவியையும் இவர்கள் இலவசமாக வழங்குகின்றனர். இதற்கென சிறப்பு தடுப்பூசி முகாமையும் இந்த அமைப்பு ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் தற்போது 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வரும் நிலையில், இந்த அமைப்பின் முயற்சி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# கேரளாவில் இடதுசாரி கூட்டணி வரலாற்று வெற்றி பெறும்!

## பினராயி விஜயன் நம்பிக்கை



கேரளாவில் 140 தொகுதிகளுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக இன்று நடைபெற்று வருகிறது. முதல் மந்திரி பினராயி விஜயன் தர்மடம் தொகுதியில் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் சி.ரகுநாத் போட்டியிடுகிறார்.

பினராயி விஜயன் தனது தர்மடம் தொகுதியில் இன்று வாக்களித்தார். அதன்பின் பினராயி விஜயன் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான எல்டிஎஃப் கூட்டணி வரலாற்று வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என நம்புகிறேன்.

இடதுசாரிகளுடன் துணையாக இருக்கும் மக்கள் மீது தீவிரமான நம்பிக்கை இருக்கிறது. பா.ஜ.க., நீமம் தொகுதியில் மட்டும் கடந்த தேர்தலில் வென்றது. ஆனால், இந்த முறை பா.ஜ.கவுக்கு ஒரு இடம் கூட கிடைக்க விடமாட்டோம். கடந்த தேர்தலைவிட இந்த முறைநாங்கள் வரலாற்று வெற்றி பெறுவோம். ஐயப்ப பக்தர்களும், அனைத்துக் கடவுள்களும் இடதுசாரிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்றார்.

## ஊழல் புகார் எதிரொலி;

# மகாராஷ்டிரா உள்துறை அமைச்சில் மாற்றம்



மகாராஷ்டிரா உள்துறை அமைச்சர் மீதான மும்பை மாநகர முன்னாள் காவல் ஆணையர் தெரிவித்த புகார் குறித்து விசாரணை நடத்துமாறு சி.பி.ஐக்கு மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து அனில் தேஷ்முக் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

மும்பையில் தொழிலதிபர் முகேஷ் அம்பானி வீட்டின் அருகே வெடிபொருள்களுடன் கார் நிறுத்தப்பட்ட விவகாரத்தில் மும்பை குற்றவியல் உதவி ஆய்வாளர் சச்சின் வாஸி கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக கருத்து தெரிவித்த மும்பை மாநகர முன்னாள் காவல் ஆணையர் பரம் வீர் சிங் உள்துறை அமைச்சராக இருக்கும் அனில் தேஷ்முக் ஹோட்டல்கள், பார்களில் இருந்து மாதந்தோறும் 100 கோடி ரூபா வசூலித்து தருமாறு சச்சின் வாஸி உள்ளிட்ட அதிகாரிகளை வற்புறுத்தியதாகத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக மும்பை உயர் நீதிமன்றத்தில் பரம் வீர் சிங் வழக்கு தொடர்ந்த நிலையில் சி.பி.ஐ. விசாரணைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். இதுவரை இல்லாத வகையில் இருக்கும் மிக முக்கியமான குற்றச்சாட்டு குறித்து, 15 நாள்களுக்குள் முதல் கட்ட விசாரணையை முடிக்க வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், முதலமைச்சர் உத்தவ் தாக்கரையே சந்தித்த உள்துறை அமைச்சரான தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனில் தேஷ்முக் இராஜினாமா கடிதத்தை அளித்தார். அனில் தேஷ்முக் பதவி விலகியதை அடுத்து அவர் பொறுப்பு வகித்து வந்த உள்துறை திலீப் வல்சே பாட்டீலுக்கு ஒதுக்கப்பட்டது.

மகாராஷ்டிராவில் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்று தீவிரம்;

# மாநில முதல்வர்களுடன் பிரதமர் ஆலோசனை



கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் ஏப்ரல் 8 இல் அனைத்து மாநில முதல்வர்களுடனும் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தவுள்ளார்.

கொரோனா பரவல் குறித்தும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் தமிழகம், மகராஷ்டிரா, கேரளா உள்ளிட்ட அனைத்து மாநிலங்களின் முதல்வர்களுடனும் இந்த ஆலோசனை நடைபெறவுள்ளது.

இந்தியாவில் கடந்த ஆண்டு இறுதியில் படிப்படியாக குறைந்த கொரோனா பாதிப்பு அண்மைய நாள்களாக மீண்டும் அதிகரித்து வருகிறது. அந்த வகையில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 558 பேருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. உலகளவில் தினசரி கொரோனா பாதிப்பில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் கடந்த ஆண்டு கொரோனா முதல் அலையின்போது அதிகபட்சமாக செப்டெம்பர் 17ஆம் திகதியன்று 98 ஆயிரத்து 795 பேர் பாதிக்கப்பட்டனர்.

நாடு முழுவதும் இதுவரை ஒரு கோடியே 25 லட்சத்து 89 ஆயிரத்து 67 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் வேளையில் 52 ஆயிரத்து 847 பேர் மட்டுமே குணமடைந்துள்ளனர். கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 478 ஆக உள்ளது.

தடுப்பூசி போடும் பணியும் நாடு முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இது வரை 7 கோடியே 91 லட்சத்து 5 ஆயிரத்து 163 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனிதர்களை போலவே தோற்றமளிக்கும் ரோபோக்கள் 3டி பிரிண்டிங் முறையில் தோல் தயாரித்து உருவாக்கம்



அச்சு அசலாக மனிதர்களைப் போலவே தோற்றமளிக்கும் ஹியூமனாய்ட் ரோபோக்களை உருவாக்கும் பணியில் ரஷ்யாவைச் சேர்ந்த புரோமோபாட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

விளாடிவோஸ்டோக் நகரில் உள்ள ஆய்வகத்தில் 3டி பிரிண்டிங் முறையில் மனித தோல்களை வைத்து இத்தகைய ரோபோக்களை தயாரிக்கும் பணியில் அந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

பார்த்தாலும், தொட்டாலும், மனிதர்களைப் போல உணர்வு ஏற்படுவதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள அந்நிறுவனம், அந்த ரோபோக்களுக்கு தலைமுடி, புருவம், விழிகள் என சகலத்தையும் அச்சு அசலாக ஏற்படுத்தி வருகிறது.

## சிறைச்சாலையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நைஜீரியாவில் 1,800 கைதிகள் தப்பி ஓட்டம்



மேற்கு ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் அரசை எதிர்த்து பயங்கரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் நைஜீரியாவில் உள்ள சிறையில் பயங்கரவாதிகள் திடீரென்று தாக்குதல் நடத்தி உள்ளனர்.

அந்த நாட்டின் தென் கிழக்கு பிராந்தியத்தில் உள்ள பொலிஸ், இராணுவ கட்டடங்கள் மற்றும் சிறைச் சாலையை குறி வைத்து துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினார்கள்.

துப்பாக்கி ஏந்திய நபர்கள் ஒரே நேரத்தில் பல அரசு கட்டிடங்களுக்குள் புகுந்து சேதப்படுத்தினார்கள்.

சிறையில் நடத்திய தாக்குதலை பயன்படுத்தி 1,800 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடிவிட்டார்கள்.

அதன்பின் பயங்கரவாதிகள் அங்கிருந்து தப்பி சென்றனர். இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஆனால் பிரிவினைவாதிகள் மீது நைஜீரிய காவல்துறை ஜெனரல் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து நைஜீரிய சிறைச்சாலையின் செய்தித் தொடர்பாளர் பிரான்சிஸ் ஏனோபர் கூறியதாவது:-

தாக்குதல் நடத்தியவர்கள் கனகர ஆயுதங்களுடன் வந்தனர். இயந்திர துப்பாக்கி முதல் ரொக்கெட் செலுத்தும் கையெறி குண்டுகள் வரை அனைத்தையும் வைத்திருந்தனர்.

அவர்கள் பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள ஆயுதக் கிடங்கை அடைந்து ஆயுதங்களை கைப்பற்றுவதற்காக தாக்குதல் நடத்தி உள்ளனர். ஆனால் அது முறியடிக்கப்பட்டது.

சிறையில் இருந்து தப்பிய கைதிகளை மீண்டும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, என்றார்.

## நியூயோர்க்கில் இனவெறியை கண்டித்து ஆசியர்களால் பிரம்மாண்ட பேரணி



ஆசிய இனத்தவருக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் மற்றும் இன பாகுபாடுகளை கண்டித்து நியூயோர்க் நகரில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் பேரணி நடைபெற்றது.

அதில் 500 க்கும் மேற்பட்ட ஆசிய அமைப்புகளின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். அமெரிக்காவில் காலங்காலமாக ஆசியர்களுக்கு எதிரான பாகுபாடு காட்டப்பட்டாலும், அண்மைக் காலமாக அது உச்ச கட்டத்தை எட்டியுள்ளதாக பேரணி யில் பங்கேற்றவர்கள் குற்றம் சாட்டினர்.

ஆசியர்களுக்கு எதிரான வெறுப்புணர்வை கைவிட வேண்டும், இனவேறி வேண்டாம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பேரணியில் பங்கேற்றவர்களில் சிலர் ஏந்தி இருந்தனர்.

## இந்தோனேஷியாவில் வெள்ளத்தில் மாயமான எழுபது பேரை தேடும் பணிகள் தொடர்கின்றன



இந்தோனேஷியாவில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தோனேஷியாவில் வீசி வரும் செரோஜா (Seroja) புயலைத் தொடர்ந்து பெய்த கனமழையால் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

சாலைகளில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்புக் குழுவினர் படகுகளில் சென்று மீட்டு வருகின்றனர். இதுவரை வெள்ளத்தில் மூழ்கி 68 பேர் உயிரிழந்துள்ளனர்.

## சுமார் 53.3 கோடி பேஸ்புக் பயனாளிகளின் தகவல்கள் திருட்டு?



உலகளவில் சுமார் 53.3 கோடி பேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட விவரங்கள் ஹேக்கர்களின் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக சைபர் செக்யூரிட்டி நிறுவனமான ஹட்சன் ராகின் நிறுவனர் அலோன் கால் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், பேஸ்புக் பயனர்களின் பெயர்கள், தொலைபேசி எண்கள் உள்ளிட்ட தகவல் வெளியாகியுள்ளதாக பதிவிட்டுள்ளார்.

அதன்படி இந்தியாவில் இருந்து 60 லட்சம் பயனர்களும், அமெரிக்காவில் 320 லட்சம், இங்கிலாந்திலிருந்து 110 கோடி மற்றும் ஆஸ்திரேலியாவின் 70 லட்சம் பயனர்கள் பற்றிய தகவல்கள் கசிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பேஸ்புக் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர், 2019 ஆம் ஆண்டே இந்த தகவல் புகாரளிக்கப்பட்டது என்றும், இதனை 2019 ஆண்டே கண்டறிந்து சரிசெய்ததாகக் கூறியுள்ளார்.

## தாய்லாந்தில் நடந்த அழகி போட்டியில் மியன்மார் இராணுவத்துக்கு எதிராக குரல் கொடுத்த அழகி



அதை வேளையில் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டு மக்கள் 2 மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்தநிலையில் தாய்லாந்தில் நடைபெற்ற அழகிப் போட்டி ஒன்றில் கலந்து கொண்ட மியன்மார் நாட்டு அழகி ஹான்லே, மியன்மார் இராணுவத்துக்கு எதிராக பேசியது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அவரது 2 நிமிடப் பேச்சு சர்வதேச பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாகியுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்ற 'மிஸ் கிராண்ட் இன்டர்நேஷனல் 2020' அழகிப் போட்டியில் பேசிய ஹான் லே "இன்று எனது நாட்டில் பல மக்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். ஜனநாயகத்துக்காக மியன்மார் மக்கள் சாலைகளில் இறங்கி போராடிக் கொண்டிருக்கி றார்கள். மியான்மருக்கு உதவுங்கள். சர்வதேச உதவி மியன்மாருக்கு தற்போது அவசியம் தேவைப்படுகிறது. சிறந்த உலகை உருவாக்குவோம்" என கூறினார்.

22 வயதான உளவியல் மாணவியான ஹான் ஷேல சரியாக ஒரு மாதத்துக்கு முன்பு யாங்கூன் நகர வீதிகளில், மியன்மார் இராணுவத்துக்கு எதிராக போராடிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சர்வதேச அரங்கில் மியன்மார் இராணுவத்துக்கு எதிராக குரல் கொடுத்ததன் காரணமாக அடுத்த சில மாதங்களுக்கு தாய்லாந்திலேயே தங்கி இருக்க ஹான் லே முடிவு செய்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பிற்கு ஒதுக்கப்பட்டதை எப்படி களுத்துறைக்கு மாற்ற முடியும்?



## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் கேள்வி

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த இருதயவியல் பிரிவின் ஆய்வகத்திற்கான **(Cardiology Unit - Cardiac Catheterization Laboratory)** இதய வடிகுழாய் மற்றும் ஆஞ்சியோகிராம் கருவியினை களுத்துறை மாவட்டத்திற்கு எப்படி ஒதுக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுஇடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கேள்விக்கு எழுப்பியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், சுகாதார அமைச்சரினை சில காலங்களுக்கு முன் சந்தித்த வேளை பிரதமருக்கு முன்னால் கொடுப்பதாக உறுதிப்படுத்தப்பட்டு கூறப்பட்ட நிலையில், இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்திற்குக் கிடைக்கவில்லை.

அத்தோடு, கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மட்டக்களப்பிற்கு வருகைத் தந்தபோது, உடனிருந்த இராஜாங்க அமைச்சர் ஒருவர், தனது மாவட்டத்தில் கெத் லெப் அமைக்கப்படும் என்றும் எதிர்காலத்தில் எமது மாவட்டத்திற்கு இதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில், குறித்த ஆய்வகம் குறித்த நிலைப்பாட்டை அறிவிக்க முடியுமாஎனகேள்வியெழுப்பியிருந்தார்.

அதற்கு, களுத்துறைக்கு மாற்றப்பட இருப்பதாக அறியக்கிடைக்கின்றது. ஆனால் அங்கிருந்து கொழும்புக்கான பயண தூரம் ஒரு மணித்தியாலங்களே ஆனால் மட்டக்களப்புக்கு கிடைக்குமானால் பயனடையப்போவது கிழக்கு மாகாணம் முழுவதுமே.

மட்டக்களப்பு அல்லது திருகோணமலையில் உள்ள ஒரு நோயாளி, குறித்த சிகிச்சையைப்பெற்றுக்கொள்ளவதற்காக கொழும்புக்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ 8 மணிநேரம் செலவழித்து பயணம் செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பில் காணப்படும் சுகாதார ஊழியர்களின் பற்றாக்குறை சம்பந்தமாகவும் சாணக்கியன் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், மட்டக்களப்புக்கு கொண்டுவர இருந்த நிலைமையில் அங்கு காணப்பட்ட தொழில்நுட்ப பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக களுத்துறையில் அவ் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேசவாதிகளினால் கட்டுவிக்கப்பட்ட கட்டடத்திற்கு மாற்றுவதாக முடிவெடுக்கப்பட்டது என்று கூறினார்.

அடுத்த ஒப்பந்தத்தின் (Tender) இன் அடிப்படையில் மட்டக்களப்பிற்கு வழங்குவதாகவும் கூறினார். இது சம்பந்தமாக தான் விவரமான அறிக்கை ஒன்றை தருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் வைத்திய ஆளணி பற்றாக்குறை சம்பந்தமாகக் கருத்து தெரிவித்த அவர் "ஒட்டுமொத்த நாட்டிலும் வைத்தியர்களின் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் சேவையாற்றும் வைத்தியர்கள், விசேடமாக பெண் வைத்தியர்கள், கடமையில் இணைந்து இரண்டு மூன்று மாதங்களிலேயே கர்ப்பகால விடுமுறையை எடுக்கிறார்கள்.

பின்னர் இரண்டு வருடங்களிலேயே வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். இதனாலேயே பற்றாக்குறை நிலவுவதாக கூறினார்.

இந்தநிலையில் முதல் ஒப்பந்தத்தின் (Tender) அடிப்படையில் முன்னரே தீர் மானிக்கப்பட்ட படி மட்டக்களப்பிற்கு வழங்கிவிட்டு அடுத்த ஒப்பந்தத்தின் (Tender) மூலம் களுத்துறைக்கு வழங்குமாறு சாணக்கியன் இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

# முஸ்லிம் சமய திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் ரத்து

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தன்னார்வ தொண்டர் நிறுவனங்களின் தகவல்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். சில நிறுவனங்களின் பதிவை ரத்து செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தன்னார்வ நிறுவனங்களின் பதிவுகள் ரத்துச்செய்யப்பட்டிருப்பது தொடர்பாக முஜிபுர் ரஹ்மான் கேட்டிருந்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பல தன்னார்வ நலனோம்புகை நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வருவது தொடர்பாக பாதுகாப்புப் பிரிவினால் திணைக்களத்திடம் விசாரித்தபோது, அதுதொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் இருக்கவில்லை.

இது கேள்விக்குறியான விடயமாகும். இந்த நிறுவனங்களின் கணக்கு விவரங்கள் திணைக்களத்துக்கு வழங்கப்படாத நிலையில் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத்துக்கு எந்தவித சட்ட ஏற்பாடுகளும் இல்லை. அதனால் இதுதொடர்பாக புதிய சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இவ்வாறான நன்கொடை நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டிருக்கும் அனைத்து நிறுவனங்களையும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாக பதிவு செய்யுமாறு வக்பு சபை கடந்த 2019 ஆண்டு எழுத்து மூலம்அந்தநிறுவனங்களுக்குஅறிவித்துள்ளது. இதன்போது சில தொண்டு நிறுவனங்கள் செயற்படுவதில்லை என்பது தெரியவந்தது. அதன் பிரகாரம் அந்த நிறுவனங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

அத்துடன் வக்பு சபை சட்டத்துக்கமைய பதிவு செய்யப்பட்டிருந்த ஏனைய நிறுவனங்களுக்கு ஒரு வருடகாலம் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2020 ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னர் வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த பதிவு இலக்கத்தை பயன்படுத்தக்கூடாது என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிரகாரம் சில நிறுவனங்கள் வக்பு சபை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய நிறுவனங்கள் கம்பனிகள் சட்டம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார்.

# பழவகைகளின் விற்பனை அதிகரிப்பு




**அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கரையோர பகுதிகளில் பிரதான வீதியோரங்களில்ஆங்காங்கே வெள்ளரிப்பழம் உட்பட பழவகைகள் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.**

**குறிப்பாக சம்மாந்துறை – அம்பாறை பிரதான வீதி, கல்முனை – அக்கரைப்பற்று, பிரதான வீதியோரங்களில் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளில் வெள்ளரிப் பழத்தினை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். பொதுமக்கள் ஆர்வத்துடன் கொள்வனவில் ஈடுபடுகின்றனர். இம் மாவட்டத்தில் தற்போது நிலவி வருகின்ற வரட்சியான கால நிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் ஊஸ்ணத்தை தவிர்ப்பதற்காக இவ்வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகைகளை சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் காட்டி வருகின்றனர்.**

**வெளி இடங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்திற்கு வருகின்ற பழ வகைகளின் தரங்களை பரிசோதிப்பதற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஜீ. சுகுணனின் வழிகாட்டல்களுக்கு அமைய சுகாதாரப் பரிசோதகர்கள் தினமும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.**

**இது தவிர தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்திற்க்கு அதிக கேள்வி ஏற்பட்டுள்ளதுடன் 150 ரூபா முதல் சுமார் 350 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.**

# அறநெறி மாணவர்களுக்கு நீதி நூல் வழங்கும் நிகழ்வு

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேச செயலகமும், அறநெறிப் பாடசாலைகளும் இணைந்து நடத்தும் மாணவர்களுக்கு நீதி நூல்கள் மற்றும் துணைநூல்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் பிரதேச செயலக கட்டடத்தில் இடம்பெற்றது.**

**இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் தலைமையில், முன்னிலை அதிதியாக இந்துமத குருமார்கள் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், சிறப்பு அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் கே. சதிஸ்சேகரன், கணக்காளர் எஸ். அரசரெட்ணம், நிர்வாக உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர் திருக்கோவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு.எஸ் ரவீந்திரன், பாடசாலைகளின் அதிபர்கள், இந்து மன்றங்களின் தலைவர்கள், ஆலயதர்மகர்த்தாக்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.**

# பாலக்காட்டு வெட்டை குளத்தை பாதுகாக்க பிரதேசசபை நடவடிக்கை



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட நாவலடி பிரதான வீதியோரம் அமைந்துள்ள பாலக்காட்டு வெட்டை குளத்தை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள குளத்தையும் அதனை அண்மித்த பகுதியையும் சிலர் நாசப்படுத்திச் செல்கின்றனர்.

இக் குளத்தில் வாகனங்களை கழுவுவதால் அதிலிருந்து வெளியேறும் எண்ணெய் குளத்தில் கலப்பதினால் நீர் மாசடைகின்றது.

அத்துடன், குளத்திலும் அதனை அண்மித்துள்ள பகுதியிலும் கழிவுப் பொருள்கள், மிருகங்களின் எச்சங்கள் போன்றவற்றை கொட்டிச் செல்வதினால் அப் பகுதி துர்நாற்றம் வீசும் பகுதியாகவும் மாறியுள்ளது.

அதனைத் தடுத்து நிறுத்தி குளத்தை பாதுகாக்க எமது பிரதேச சபையின் ஏற்பாட்டில் குளப் பகுதி சிரமதானம் செய்யப்பட்டுள்ளதுடன் குளத்தை நாசப்படுத்தும் நபர்களை கண்காணிக்க அப்பகுதியில் சீ.சீ.ரீ.வி. கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

இதனை மீறிச் செயற்படும் நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் ஏ.எம்.நௌபர் மேலும் தெரிவித்தார்.

# வாய்க்காலில் குளித்தவர் நீரில் மூழ்கி மரணம்

**திருகோணமலை, ஏப். 06**

**திருகோணமலை – மாவிலாறு வாய்க்காலில்குளிப்பதற்காகச்சென்றஇளைஞரொருவர் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளதாக சேறுநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**சேறுநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதி அபிவிருத்தி நிர்மாணப் பணியில் ஈடுபட்டு வரும் ஐந்து பேர் வேலையை முடித்துவிட்டு மாவிலாறு வாய்க்காலில் குளிப்பதற்காக சென்ற போது ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**இவ்வாறு உயிரிழந்தவர் பேராதனை – மூர்தலாவ,பேரகொல்ல பகுதியைச் சேர்ந்த சமரக்கோன் முதியன்சலாகே சமிந்த பண்டார சமரக்கோன் (28வயது) எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**இதன்போது உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், சட்ட வைத்தியரின் பிரேத பரிசோதனை முடிவடைந்த உடன் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kalaikkathir



# மியாமி ஓபின் டென்னிஸ் போலந்து வீரர் ஹியூபெர்ட் சம்பியனானார்



மியாமி ஓபின் சர்வதேச டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைறெறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 37 ஆவது இடம் வகித்த போலந்து வீரர் ஹியூபெர்ட் ஹோர்கக்ஸ், இத்தாலியின் 19 வயது ஜானிக் சின்னெரை சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஹியூபெர்ட் ஹோர்கக்ஸ் 7 – 6 (7 – 4), 6 – 4 என்ற நேர்செட்டில் ஜானிக் சின்னெரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கினார். இந்த வெற்றியைப் பெற அவருக்கு 1 மணித்தியாலம் 45 நிமிடம் தேவைப்பட்டது.

24 வயதான ஹியூபெர்ட் இந்த வெற்றியின் மூலம் 1,000 தரவரிசைப் புள்ளிகள் கொண்ட ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்ற முதல் போலந்து வீரர் என்ற பெருமையை பெற்றார். இந்த ஆண்டில் அவர் கைப்பற்றிய 2 ஆவது பட்டம் இதுவாகும்.



# திட்டமிட்டபடி ஐ.பி.எல். நடக்கும் சவுரவ் கங்குலி உறுதி!

இம்முறை ஐ.பி.எல். சீசன் திட்டமிட்டபடி நடக்கும் என உறுதியளித்துள்ளார் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சவுரவ் கங்குலி. கொரோனாத் தொற்றுப் பரவலின் இரண்டாம் அலையின் தீவிரத்தால் ஐ.பி.எல். தொடரை நடத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ள சூழலில் அவர் இவ்வாறு கூறியிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

மும்பையில் இந்த சீசனின் முதல் சில லீக் போட்டிகள் நடைபெற உள்ளன. இருப்பினும் மகாராஷ்டிராவில் கொரோனா தொற்று தீவிரமாக உள்ளதன் காரணமாக மாநில அரசு பல்வேறு வழிகாட்டு விதிமுறைகளை அமுல்படுத்தி உள்ளது. இந்த நிலையில், அனைத்தும் திட்டமிட்டபடி நடக்கும் என்று ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே, டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் அக்சர் பட்டேல், பெங்களூரு அணியின் தேவ்தத் படிக்கல், சென்னை அணியின் நிர்வாகி ஒருவர் மற்றும் மும்பை மைதானத்தின் ஊழியர்கள் என ஐ.பி.எல். தொடரோடு சம்பந்தப்பட்டவர்கள் சிலர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால், தொடர் மும்பைக்கு மாற்றாக வேறேதேனும் மைதானத்தில் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கங்குலி அந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இந்த ஐ.பி.எல். தொடரில் மைதானப் பார்வையாளர்களுக்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் வீரர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பாக ஆலோசித்து வருவதாகவும் பி.சி.சி.ஐ. வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகி வருகின்றன.

# தோற்றாலும் முன்னேறினார் பியான்கா



மியாமி ஓபின் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிவரை முன்னேறிய கனடா வீராங்கனை பியான்கா அன்ட்ரெஸ்கு, தரவரிசையில் 3 இடம் முன்னேறி 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். சம்பியன் பட்டம் வென்ற ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி நம்பர் 1 அந்தஸ்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.



# அரைமரதன் ஓட்டத்தில் புதிய உலக சாதனை

கென்யாவின் ருத் செபன்கெட்டிச் என்ற வீராங்கனை பெண்களுக்கான அரை மரதன் ஓட்டத்தில் புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார். இவர் ஒரு மணித்தியாலம் நான்கு நிமிடங்கள் மற்றும் இரண்டு வினாடிகளில் (01:04:02) இலக்கை அடைந்து, கடந்த ஆண்டு பெப்ரவரியில் எத்தியோப்பியாவின் அபாபெல் யெசானே பதிவுசெய்த ஒரு மணித்தியாலம் நான்கு நிமிடங்கள் 31 விநாடிகள் (01:04:31) என்ற சாதனையை அரை நிமிட வித்தியாசத்தில் முறியடித்தார்.

இதேவேளை, இதே போட்டியில் எத்தியோப்பியாவின் யலெம்ஸெர்ஃப் யேஹூவலா (1:04:40) இரண்டாவது இடத்தையும் கென்யாவின் ஹெலன் ஒபிரி (1:04:51) மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

ஒரே அரை மரதன் ஓட்டத்தில் மூன்று பெண்கள் 65 நிமிடங்களுக்குள் ஓடி முடித்துள்ளமையும் சாதனையாகப் பதிவுபெற்றுள்ளது.

# இந்திய கிரிக்கெட் ஊழல் தடுப்புப் அதிகாரியாக குஜராத் முன்னாள் டி.ஜி.பி. நியமனம்



குஜராத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி காந்த்வாலா இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.)யின் புதிய ஊழல் தடுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொறுப்பிலிருந்த அஜித் சிங் கடந்த மார்ச் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்ற நிலையில் அந்த இடத்துக்கு காந்த்வாலா உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து காந்த்வாலா கூறுகையில், உலகின் சிறந்த கிரிக்கெட் அமைப்பான பி.சி.சி.ஐயின் ஒரு பகுதியாக இருக்கிறேன் என்பது ஒரு பெரிய மரியாதைக்குரிய விடயம். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணியில் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் செயல்படுவேன்" - என்று குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு காவல் துறையிலிருந்து ஓய்வுபெற்ற காந்த்வாலா, மத்திய அரசின் லோக்பால் தேடுதல் குழுவில் பணியாற்றியவர் என்பது கவனிக்கத்தக்கது.



# கொரோனா பயம் சர்வதேச பட்மின்டன் தொடர்கள் ரத்து

*உலகம் முழுவதும் கொரோனாப் பரவலின் புதிய அலை தீவிரமாக உள்ளது. அதனால் ஜூலை 20 - 25 திகதிகளில் நடைபெறவிருந்த ரஷ்ய ஓபின், ஒக்டோபர் 5 -10 திகதிகளில் நடக்கவிருந்த இந்தோனேஷியா ஓபின் பட்மின்டன் தொடர்கள் ரத்து செய்யப்படுவதாக உலக பட்மின்டன் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.*

*கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்தத் தொடர்களை நடத்துவது சாத்தியமில்லை என்பதால் அந்தந்த நாட்டு பட்மின்டன் சங்கங்களுடன் கலந்தாலோசித்து இந்த இரண்டு போட்டித் தொடர்களும் ரத்துச் செய்யப்பட்டு இருக்கின்றன என்று உலக பட்மின்டன் சம்மேளனம் தனது அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் சதொச நிலையம் மூடப்படும்

## பந்துல குணவர்தன தெரிவிப்பு



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நாட்டு மக்களுக்கு ஆயிரம் ரூபாவில் தரமான பொருள்களை நிவாரண அடிப்படையில் வழங்கியுள்ளோம்.

புத்தாண்டில் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லும் போது இந்த நிவாரண பொதிகளை கொண்டு செல்லுங்கள்.

14 மற்றும் 15 ஆம் திகதிகளில் மாத்திரம் சதொச விற்பனை நிலையம் மூடப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 12 அத்தியாவசியப் பொருள்களை உள்ளடக்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொதி கடந்த முதலாம் திகதி தொடக்கம் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிவாரண பொதி தரமற்ற உணவுப் பொருள்களை உள்ளடக்கியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய நிவாரணப் பொதியில் இலங்கை தர நிர்ணய சபையின் முத்திரை பதித்த உணவுப் பொருள்கள் மாத்திரம் பொதி செய்யப்பட்டுள்ளன.

இந்த விலையைக் காட்டிலும் குறைவான விலையில் தரமான பொருள்களை பிறிதொரு விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியாது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தின் மத்தியில் இவ்வாறான நிவாரணம் வழங்குவது சாதாரண விடயமல்ல.

ஆயிரம் ரூபா அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளடங்கிய பொதி விற்பனை செய்துள்ளமையால் சதொச விற்பனை நிறுவனம் வரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு இலாபமடைந்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் உறவினர்கள் வீடுகளுக்கு செல்லும் போது இந்த நிவாரணப் பொருள்களை வாங்கிச் செல்ல வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

நாடு தழுவிய ரீதியில் உள்ள சதொச விற்பனை நிலையங்கள் எதிர்வரும் 14, 15 ஆகிய தினங்களில் மாத்திரம் மூடப்படும். 16ஆம் திகதி நிவாரண பொதி விற்பனை செய்யப்படும். சுபீட்சமான கொள்கைத்திட்டத்துக்கு அமைய தொசவிற்பனை நிலையங்கள் கிராமத்துக்கு கொண்டு செல்லப்படும்.

கடந்த காலத்தை காட்டிலும் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 27 அத்தியாவசியப் பொருள்களின் விலை நிலையான தன்மையில் பேணப்படுகிறது. சிறு ஏற்றுமதி பயிர்களின் விலைகள் மாத்திரம் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் உள்ளூர் விவசாயிகள் நன்மை பெற்றுள்ளார்கள்.

- என்றார்.

# எனது நீதிமன்றப் போராட்டமே 1,000 ரூபா வெற்றிக்கு காரணம்

## என்கிறார் வடிவேல் சுரேஸ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும், தான் தனது சட்டத்தரணிகளுடன் நீதிமன்றத்துக்கு சென்று போராடியதன் காரணமாகவே 1,000 ரூபா சம்பளம் என்ற இலக்கை வென்றெடுக்க முடிந்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட உத்தரவை அரசியல் கட்சி, தொழிற்சங்க பேதமின்றி பெருந்தோட்ட தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தேசியத் தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1,000 ரூபா சம்பள விவகாரம் தொடர்பில் நான்காவது தினமாகவும் இன்று நாம் நீதிமன்றம் சென்றிருந்தோம்.

எமது சட்டத்தரணிகளின் திறமையான வாதத்தின் மத்தியில் முதலாளிமார்களால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை நீதிமன்றம் முற்றாக நிராகரித்துள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி சம்பள நிர்ணய சபையால் தீர்மானிக்கப்பட்டு, 2217 கீழ் 37 என்ற இலக்கத்தை கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவை, பெருந்தோட்ட கம்பனிகள் நிறைவேற்ற வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நீதி மன்றம் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

அதற்கமைய 900 ரூபா அடிப்படை சம்பளமும் 100 ரூபா வாழ்க்கை செலவுமாக, 1000 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். இதுவும் கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து 1,000 ரூபா அப்படை சம்பளத்தை நிலுவைக் கொடுப்பனவுடன் வழங்க வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் நீதிமன்ற விசாரணைகள் மே மாதம் 5 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. அதற்கும் நாம் செல்ல தயாராக இருப்பதுடன் , இதன் போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, நலன்புரி மற்றும் வழமை தொடர்பில் நீதிமன்றம் கவனம் செலுத்தும் என்று நாம் நம்புகின்றோம்.

143 கீழ் 2021 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் முன்வைத்த இடைக்கால தடை உத்தரவு முற்றாக நிராகரித்தமை தொடர்பில் நீதிமன்றத்துக்கு நன்றி தெரிவிப்பதுடன், எமது தொப்புள் கொடி உறவுகள் சார்பில் எமது சட்டதரணிகளுடன் மன்றத்தில் முன்னிலையாகி உரிமைகளை வென்றெடுக்க நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம்.

இது எமக்குக் கிடைக்கப் பெற்ற பாரிய வெற்றியாகும். இது வடிவேல் சுரேஸ் என்ற தனிநபரின் போராட்டத்தால் முன்னெடுக்கப்பட்டது. ஏனையவர்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் மேலும் பல வெற்றிகளை சுவீகரித்துக் கொண்டிருக்கலாம்.

எமக்கு கிடைக்கப்பெற்ற இந்த வெற்றியை தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் என்று பிளவுப்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடுவதுடன், எதிர்வரும் காலங்களில் தோட்ட தொழிலாளர்களை தோட்ட நிர்வாகங்கள் நசுக்குவதற்கு இடமளிக்ககூடாது.

கடந்த கால அரசாங்கங்கள் அவர்களது வசதிக்கேற்ப பல்வேறு அமைச்சுகளை நியமித்து, தோட்ட மக்களின் முன்னிலையில் நாடகங்களை அரங்கேற்றி வந்துள்ளனர்.

பல்வேறு வீட்டுத்திட்டங்களை முன்வைத்தாலும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் மாத்திரமே அங்கு காணப்படுகின்றது. எமது அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மக்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். அதனூடாக அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 1,000 ரூபா அடிப்படை சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்தார். ஆனால் நாம் நான்கு தடவையாகவும் நீதிமன்றம் சென்றதின் பின்னரே 1,000 ரூபா கிடைக்கப்போகின்றது. அரசாங்கம் எமது மக்களைக் கைவிட்டாலும் நான் எனது மக்களைக் கைவிடுவதற்கு ஆயத்தமில்லை.

இதேவேளை ஊவா மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சு ஒன்றை உருவாக்க நானே முன்னின்று செயற்பட்டிருந்தேன். இல்லை என்றால் எமது பெண் அதிபர்களை முலங்காலிடும் செயற்பாடுகளே கடந்த காலங்களில் இடம்பெற்று வந்தன.

அதனை மாற்றி அமைக்கும் நோக்கத்திலேயே நாம் இந்த திட்டத்தை கொண்டுவந்தோம். அதற்கான வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டிருந்தோம். 13 இற்கும் அதிகமானது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் தற்போது 13 இற்கும் குறைந்துள்ளது என்ற அடிப்படையிலேயே மாகாணசபை முறைமை காணப்படுகின்றது.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலின் போது ஊவா மாகாணத்தை கைப்பற்றி தமிழ் கல்வி அமைச்சை ஸ்தாபிப்பதோடு மட்டுமன்றி எமது கலை கலாசார செயற்பாடுகளையும் மேற்கொள்வோம்.

# 132 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி

இலங்கையில் இதுவரையில் 132 கர்ப்பிணித் தாய்மார்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனினும் இவர்களில் யாரும் உயிரிழக்கவில்லை. அத்தோடு ஒரு வயதுக்குக் குறைந்த இரு குழந்தைகள் இதுவரையில் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளன என சுகாதார அமைச்சின் குடும்பநல பணியகத்தின் தாய்மார் மற்றும் குழந்தைகள் சுகாதார பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விசேட வைத்திய நிபுணர் சித்திரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளான எந்தவொரு கர்ப்பிணித் தாய்மாரும் உயிரிழக்கவில்லை. சகலருக்கும் சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு அவர்கள் பூரண குணமடைந்துள்ளனர்.

பிரசவத்தின் ஆரம்ப கட்டத்திலும், குழந்தை பிறக்கும் போதும், பிறந்த பின்னரும் கொவிட் தொற்றுக்கு உள்ளான தாய்மார் காணப்பட்டனர். சுமார் 130 கர்ப்பணி தாய்மார் இவ் வாறு தொற்றுக்குள்ளாகியிருந்தனர்.

அத்தோடு ஒரு வயதிற்கு குறைந்த குழந்தைகள் இரண்டு கொவிட் தொற்றால் உயிரிழந்திருந்தன. இந்தக் குழந்தைகள் வைத்தியசாலையில் சேர்க்கப்படாது வீட்டிலேயே நோய் நிலைமை தீவிரமடைந்தமையால் உயிரிழந்தன.

இதுவரையில் இலங்கையில் கர்ப்பிணிப்பெண்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்படவில்லை. கொவிட் தடுப்பூசி வழங்குவதால் கர்ப்பிணி பெண்கள் கொவிட் தொற்றுக்கு இலக்காக மாட்டார்கள் என்று உறுதிப்படுத்தபடாமையால் அவர்க ளுக்கு தடுப்பூசி வழங்கப்படவில்லை. இதே காரணத்துக்காகவே 18 வயதை விடக் குறைந்தவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவில்லை என்றார்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணிவரை 100 புதிய கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 93 ஆயிரத்து 536 ஆக அதிகரித்துள்ளது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 90 ஆயிரத்து 563 பேர் குணமடைந்துள்ளமையோடு, 2 ஆயிரத்து 392 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கடந்த ஞாயிறுக்கிழமை மேலும் 2 கொரோனா மரணங்கள் பதிவாகின. அதற்கமைய மரணங்களின் எண்ணிக்கை 581 ஆக அதிகரித்துள்ளது.

# இலங்கையில் குறைவடைகிறது கொரோனாத் தொற்றின் தாக்கம்

இலங்கையில் கொவிட் - 19 வைரஸ் தொற்றின் நோய் பரவல் 17.07 வீதம் குறைந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர இதனை தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், கொவிட் -19 வழக்குகளின் எண்ணிக்கை தற்போது படிப்படியாக குறைந்து வருகின்றது.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் 11 நாடுகள் குறித்த அறிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இலங்கை நோய் பரவல் குறைந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இதுவரையில் 132 கர்ப்பிணி தாய்மார்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். எனினும் இவர்களில் யாரும் உயிரிழக்கவில்லை.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org